# 5. சின்னச் சின்ன உதவிகள்

அழகான கிராமம் ஒன்று இருந்தது. அங்கே மகிழ்ச்சியான குடும்பம் ஒன்று வாழ்ந்து வந்தது. அவர்களுக்கு சின்ன வீட்டுத் தோட்டம் ஒன்றும் இருந்தது. அத் தோட்டத்திலே மிளகாய், கத்தரி, வெண்டிக்காய் செழிப்பாகக் காய்த்திருந்தன. அம்மாவும், அப்பாவும் தினமும் நீர் ஊற்றுவார்கள். அவர்களின் பிள்ளைகளும் உற்சாகத்துடன் அவர்களுக்கு உதவி செய்வார்கள்.

